செ.வெ.எண்:41/2017 நாள்:24.01.2017

**சிவகங்கை மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மத்திய குழு அதிகாரிகள் திரு.எஸ்.பி.திவாரி அவர்கள் மற்றும் திரு.ஆர்.அழகேசன் அவர்கள் நேரில் சென்று கள ஆய்வுப் பணிகளை மேற்கொண்டனர்.**



சிவகங்கை மாவட்டத்தில் மாவட்ட அளவிலான வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மத்திய குழு அதிகாரிகள் திரு.எஸ்.பி.திவாரி அவர்கள் மற்றும் திரு.ஆர்.அழகேசன் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.சு.மலர்விழி,இ.ஆ.ப.,அவர்கள் தலைமையில் நேரில் சென்று கள ஆய்வுப் பணிகளை மேற்கொண்டனர்.

இந்த ஆய்வில் இளையான்குடி வட்டம் குமாரகுறிச்சி, நாகமுகுந்தன்குடி, காளையார்கோவில் வட்டம் செம்பனூர், சிவகங்கை வட்டம் சோழபுரம், ஒக்கூர், கல்லல் வட்டம் கொரட்டி, தட்டட்டி ஆகிய பகுதிகளில் வறட்சியால் பாதிக்கப்பட்ட நிலங்களை பார்வையிட்டு விவசாயிகளிடம் குறைகளை கேட்டறிந்து அவர்களது கோரிக்கைகளை மத்திய அரசுக்கு பரிந்துரை செய்து விரைவில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு விவசாயப் பெருமக்களுக்கு நிவாரணம் கிடைக்க வழி செய்யபடும் என தெரிவித்தனர்.

இந்த ஆய்வின் போது, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.து.இளங்கோ, சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் திரு.அரவிந்தன் மற்றும் வட்டாட்சியர்கள், துறைச் சார்ந்த அலுவலர்கள் உடன் சென்றனர்.

::வெளியீடு::
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
சிவகங்கை.